விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 19 திங்கட்கிழமை (04.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 250

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# சம்பூரை கைப்பற்றிய பின்னர் விடுதலைப்புலிகளுடன் பேச்சு

## இந்தியாவுக்கு இலங்கை தெரிவிப்பு

(புதுடில்லி)

சம்பூரை கைப்பற்றும் இராணுவ நடவடிக்கை வெற்றி பெற்ற பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் விரும்பினால் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தகவலை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இந்தியத் தலைவர்களிடம் வெளியிட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## க.கா.குழுவின் அலுவலகங்கள் நான்காகக் குறைக்கப்படும்

### அதன் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் வெளியேறியதையடுத்து அதன் அலுவலகங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் கூறியதாவது, கண்காணிப்புக்குழுவினரது எண்ணிக்கை குறைவடைந்துள்ளமையால் எமது அலுவலகங்களை ஒன்றிணைக்கின்றோம்.

தற்போது ஆறு அலுவலகங்கள் இயங்குகின்றன. இதனை நான்காகக்குறைக்கவுள்ளோம். (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட வன்முறை சம்பவங்கள் தொடர்பில் விசாரணை அறிக்கை தயாரிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் யாழ்.குடாநாட்டில் இடம் பெற்ற வன்முறைகள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளன.

வன்முறைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கு அமைவாக விசாரணை அறிக்கைகளை தயாரித்து வருவதாக அவ் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதியரசர் டி.ஜெயவிக்கிரம தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்-கொழும்பு விமானசேவை திட்டமிட்டபடி இன்று ஆரம்பம்

### விமானசேவை அதிகார சபை அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்-கொழும்பு பயணிகள் விமானசேவை திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாவதாக பயணிகள் விமானசேவை அதிகார சபை தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட விமானசேவை நிறுவனங்கள் போக்குவரத்தை இன்று ஆரம்பிப்பது தொடர்பாக தமக்கு அறிவித்துள்ளதாக பயணிகள் விமானசேவை அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஏச்.எம்.நிமலசிறி தெரிவித்துள்ளார்.

இச் சேவை ஆரம்பிப்பதற்கு இரண்டு விமான சேவை நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த 11 ஆம் திகதி ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அரசாங்கத்தில் இணையவுள்ளார்

அரசாங்கத்தில் ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய குழு உறுப்பினருமான நந்தன குணதிலக விரைவில் இணையக் கூடும் என்று ஆளும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

நந்தன குணதிலக்கவைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியினரைப் போல குறிப்பிடத்தகுந்த எண்ணிக்கையில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி தாவி அரசாங்கத்தில் இணையக் கூடும் என்று கூறப்படுகிறது.

கடந்த 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் வேட்பாளராகப் போட்டியிட்டவர் நந்தன குணதிலக. அரசாங்கத்தில் நந்தன குணதிலக இணைந்தால் பாணந்துறை தொகுதியின் சுதந்திரக் கட்சி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

## இந்தியாவின் ஆதரவு குறித்து பிளேயருடன் பேசவில்லை

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இங்கிலாந்து பிர்தமர் றொனி பிளேயருடன் இந்தியாவின் ஆதரவு குறித்து தான் பேச்சுவார்த்தை நடத்திவில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இந்தியாவுடன் எனக்கு நல்லுறவு உள்ளது. இந்தியப் பிரதமர் மற்றும் இந்தியத் தரப்பினருடன் நான் நேரடியாக பேசுவேன். சர்வதேச நிலைமைகள் உள்ளிட்ட பல விடயங்களை றொனி பிளேயருடன் பேசினோம் அது பற்றி விரிவாக தெரிவிக்க இயலாது.

எமது அருகாமை நாடான இந்தியாவுடனான உறவுகள் குறித்து விவாதிக்க மூன்றாம் தரப்பின் உதவியைக் கோரியதாக நினைப்பது ஆச்சரியமளிக்கிறது என்றார் மகிந்த ராஜபக்ஷ.

இங்கிலாந்துக்கு திடீர் பயணத்தை மகிந்த மேற்கொண்டிருந்த நிலையில் இலங்கை அமைதி முயற்சிகளில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயில் முன்னரங்க நிலைகள் மீது பரஸ்பரம் எறிகணைத் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோயில் முன்னரங்க நிலைகளிலிருந்து தமது கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது விடுதலைப்புலிகள் நேற்று மோட்டார்த் தாக்குதல்களை மேற்கொண்டதாக தேசியப்பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கு பதிலடியாக தாம் ஆட்லறித்தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

வடமராட்சியில் இராணுவத்தின் புலனாய்வுத்துறை முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் ஆட்லறித்தாக்குதல்களை மேற்கொண்டதாக தமிழ் நெற் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

பதிலுக்கு இராணுவத்தினர் நாகர்கோயிலிலிருந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் நோக்கி எறிகணைத்தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் அவ் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை முகமாலைப் பகுதிகளில் நேற்று குண்டுச் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழிலும் பருத்தித்துறையிலும் நேற்று இருவர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலும் பருத்தித்துறையிலும் நேற்று இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். யாழ்.நகரை அண்டிய 2 ஆம் குறுக்குத் தெருவில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார்.

அளவெட்டியை சொந்த இடமாகக் கொண்ட பாஸ்கரன் சுரேஸ் (வயது 31) என்பரே கொல்லப்பட்டவராவார். இவர் இரண்டாம் குறுக்குத் தெருவில் வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றை (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வாகனங்களின் விபரம் இராணுவத்தினரால் பதிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள மோட்டார் வாகனங்கள் இராணுவத்தினரால் பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

பிரதேசவாரியாக அந்தந்தப் பகுதிக்குரிய இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இப் பதிவினை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைய நாட்களாக வீடுகளுக்குச் சென்று பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போது பிரதேசத்திலுள்ள இராணு முகாம்களுக்கு அழைத்து பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வாகனங்களின் பதிவுப் புத்தகங்களைப் பெற்று; வாகன வகை, நிறம், வாகன இலக்கம் மற்றும் வாகன உரிமையாளர்கள் என்பன பதிவு செய்யப்பட்டுகின்றன.

பதிவு செய்யப்பட்டு ஆறு நாட்களுக்குப் பின் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமுக்குச் சென்று அவர்களினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பதிவு செய்யப்படாத வாகனங்கள் வீதியில் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட மாட்டாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-12)

# வடமராட்சிக் கடற்சமரில் 80 போராளிகள் பலியாகினரா?

## இக்பால் அத்தாஸ் கேள்வி

(கொழும்பு)

பருத்தித்துறைக் கடற்சமரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் 80 போராளிகள் உயிரிழந்ததாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்படுவது சாத்தியமற்ற எண்ணிக்கை என்று பிரபல இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

சண்டே ரைம்ஸ் வார ஏட்டில் கடற்சமர் குறித்து எழுதிய கட்டுரையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைக் கடற்சமர் குறித்து அக் கட்டுரையில் இக்பால் அத்தாஸ் மேலும் எழுதியுள்ளதாவது;

திருகோணமலையிலிருந்து வடக்குக் கிழக்கு கடற்பிரதேசம் வழியாகத்தான் இராணுவம் மற்றும் பொதுமக்களுக்கான விநியோகப் பாதை அமைந்துள்ளது வெளிப்படையானது ஒன்று. அப்படியான நிலையில் இந்த விநியோகப் பாதையை புலிகள் எந்த விலை கொடுத்தேனும் சீர்குலைக்க நினைத்தால் யாழ்.குடாநாட்டில் உள்ள 40 ஆயிரம் இராணுவம் மற்றும் பொலிஸாரின் நிலை என்ன?

கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப்புலிகள் நடத்திய கடற்சமர் ஒரு திசை திருப்பும் நடவடிக்கையா? ஆயுதங்களை நடுக்கடலில் இறக்கினரா? கடற்படையினரது எதிர்த் தாக்குதல் வலிமையை சோதிப்பதற்காக ஒரு நடவடிக்கையா அது?

விடுதலைப்புலிகளின் படகுகள் யாழ். குடாநாட்டில் ஏதேனும் ஒரு பகுதியில் போராளிகளை தாக்குதல் நடவடிக்கைக்காக இறக்கிவிட்டனவா? என்று அதில் இக்பால் அத் தாஸ் கேள்வி எழுப்பியுள்ளார். (ச)

# ஷெல் தாக்குதலில் இரு வீடுகள் சேதம்

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கடலில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற மோதலினையடுத்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் பருத்தித்துறையில் இரு வீடுகள் சேதமடைந்துள்ளன.

கிராமக்கோடு பல்லப்பை வீதியில் உள்ள இரு வீடுகளே சேதமடைந்துள்ளன. ஷெல் விழுந்து வெடித்த போதிலும் அங்கிருந்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-52)

# யாழில் பாவனையிலுள்ள வாகனங்களுக்கு பங்கீட்டு அட்டை மூலம் எரிபொருள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வாகனங்களுக்கு எரிபொருள் பங்கீட்டு அட்டை மூலம் எரிபொருட்கள் வழங்கப்படவுள்ளது.

பாவனையிலுள்ள வாகனங்களின் உரிமையாளர் எரிபொருள் பங்கீட்டு அட்டைக்கான விண்ணப்படிவத்தை நடப்பு வருட வரி அனுமதிப் பத்திரம் பெற்ற பிரதேச செயலகங்களில் நாளை முதல் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் வெளிமாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தில் பாவனையிலுள்ள வாகன உரிமையாளர்களும் அவை தொடர்பான விபரங்களை அவ்வப் பிரதேச செயலகங்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச)

# கரவெட்டிப் பகுதியில் நேற்று சுற்றிவளைப்பு

(துன்னாலை)

வடமராட்சி கரவெட்டியில் நேற்றுப் பாரிய சுற்றி வளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. கரவெட்டி அத்துலு அம்மன் கோவிலடி, யார்க்கரு, சம்மந்தர் கடைப்பகுதி, தச்சன் தோப்பு, கிழவிதோட்டம் போன்ற பகுதிகளே நேற்றுத் தேடுதலுக்குட்படுத்தப்பட்டது.

வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் அனைவரினதும் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டு தல்லையம்புல பத்திரகாளி அம்மன் கோவிலடிக்கு வருமாறு கூறி விட்டுச் சென்றனர். பின்னர் அங்கு வைத்து விசாரிக்கப்பட்ட பின் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ச-10)

# ஊடகவியலாளர்கள் கடத்தப்படுவது இராணுவத்திற்குத் தொடர்பு இல்லை

## தேசிய பாதுகாப்புத் தகவல் மையம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் கடத்தப்படுவது மற்றும் அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுவிப்பது தொடர்பாக பாதுகாப்புப் பிரிவினருக்கு தொடர்பு இல்லை என தேசிய பாதுகாப்புத் தொடர்பான தகவல் மத்திய மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் சுதந்திர ஊடகத்திற்கு அச்சுறுத்தலானது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கும் பாதுகாப்புப் பிரிவினருக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் ஒரு இனந்தெரியாத குழுவினர் ஈடுபடுவதாக கூறப்பட்டது. அண்மையில் இரண்டு ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்புத் தொடர்பான தகவல் மையம் தெரிவித்துள்ளது. (ச-5)

# இந்தியா செல்ல முயன்ற 62 பேர் மன்னாரில் கைது

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்து இந்தியா நோக்கிச் செல்ல முயன்ற 62 பேர் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஊர்மனைக் கடற்பிரதேசத்திற்கு அப்பால் 47 பேர் நேற்று முன்தினம் மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தாழ்வுப்பாட்டுப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட 15 பேர் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் திருகோணமலை, தலைமன்னார், வங்காலை, பேசாலை, வவுனியா மற்றும் ஊறுமலைப் பிரதேசங்களைச்சேர்ந்தவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட அனைவரும் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களில் 7 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதிவான் எம்.பி.பாறூக் உத்தரவிட்டுள்ளார். (ச)

# ஜனாதிபதி மகிந்தவுடனான விருந்தை புறக்கணித்தார் முன்னாள் ஜனாதிபதி

(கொழும்பு)

இங்கிலாந்து சென்றிருந்த மகிந்த ராஜபக்ஷவிற்கு இலங்கைக்கான இங்கிலாந்துத் தூதுவர் அளித்த விருந்து நிகழ்ச்சியை லண்டனில் உள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புறக்கணித்துள்ளார்.

மகிந்தவைச் சிறப்பிக்கும் வகையில் இங்கிலாந்துக்கான தூதுவராகவுள்ள செனுக செனிவிரட்ண தனது இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

அந்த விருந்தில் கலந்து கொண்ட மகிந்த ராஜபக்ஷ அங்கு வந்தவர்களிடம் சுமார் இரண்டு மணி நேரம் உரையாடினார். ஆனால் இந்த நிகழ்ச்சிக்கு லண்டனில் உள்ள சந்திரிகா குமாரதுங்க செல்லவில்லை. விருந்து நிகழ்வில் சந்திரிகாவையும் மகிந்தவையும் சந்திக்க வைக்க வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர முயற்சிகள் மேற்கொண்ட போதும் பலனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே றொனிப் பிளேயருடனான சந்திப்பானது வழக்கம் போல் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு தெரியாமலே ஏற்பாடு செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (ச-5)

# யாழிலிருந்து அனுப்புமாறு புத்தளம் மக்கள் கோரிக்கை

புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த 425 பேரை மீண்டும் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாக கடந்த 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புத்தளத்தில் தங்கியிருந்தவர்கள் ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இந் நிலையில் முகமாலைச் சோதனைச் சாவடி மூடப்பட்ட நிலையில் அவர்கள் மீளத் திரும்ப முடியாதுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இவர்களை மீண்டும் புத்தளத்திற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ரிசாத் பதியூதீனிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. (ச)

# தெஹிவளையில் நேற்று சுற்றிவளைப்பு

(கொழும்பு)

தெஹிவளைப் பகுதியில் நேற்று விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நேற்று அதிகாலை மூன்று மணி முதல் காலை 7 மணிவரை இத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தேடுதல் தெஹிவளை, போதிவத்தை உட்பட பல பிரதேசங்களில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 310வீடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 330 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சோதனைகளின் போது 69 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். தம்மை அடையாளம் காட்டத் தவறியவர்களே கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா உதவ வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள்



(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா உதவ வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னைக்கு இரு நாள் பயணமாகச் சென்ற ரணில் விக்கிரமசிங்க [illegible] ஊடகவியலாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான பாகிஸ்தானிய முன்னாள் தூதுவர் பசீர் வலி மொகமெட் மீதான கொள்ளுப்பிட்டித் தாக்குதலுக்கு இந்திய றோதான் என்று குற்றஞ்சாட்டப்படுகின்ற கேள்விக்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப் புலிகள் தான் பொறுப்பு என்று அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது என்றார். (ச-5)

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இன்று தேர்த் திருவிழா

பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும்.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதையடுத்துப் பூஜைகள் ஆரம்பமாகி அம்பாள் தேரில் வலம் வருவார்.

ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியார்கள் தேவையற்ற தங்க நகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> வீணை உயர்தரமானதுதான் வித்துவானும் தேர்ந்தவர் தான். ஆனால் ஒரு நரம்பு ஓர் இடத்தில் தளர்ந்திருக்கின்றது என்றால் வீணையின் நாதமும் கெடும். வித்துவானின் உழைப்பும் பாழ்படும். —அறிஞர் அண்ணா

**வலம்புரி**

## ஊழல் நடப்பதைத் தடுக்க அனைவரும் முன்வர வேண்டும்

யாழ்.குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலையில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் நிறையவே உண்டு.

அதேநேரம் ஏற்கனவே செய்த ஊழல் மோசடிகளை மறைப்பதற்கும் தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் சில பிரகிருதிகள் மேற்கொள்ளலாம். இவற்றை அனுமதிப்பது தமிழ் மக்களுக்குச் செய்யும் பெருந்துரோகத்தனமாகும்.

மோசடிகள் நடைபெறுவதைக் கண்டும் காணாது போல் இருப்பதை ஒருபோதும் மன்னிக்க முடியாது. உயர் அதிகாரிகள் செய்யும் ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்துவதனால் தமது பதவிகளுக்கு ஆபத்து வந்துவிடும் என்று பணியாளர்கள் நினைத்தால்,

கண்ணாடிக் கூட்டிற்குள் இருந்து காலம் கடத்தும் கர்மவினைகளின் ஊழல்கள் மேலோங்கவே செய்யும்.

இத்தகைய அதிகாரிகள் தமக்குக் கீழ் கடமையாற்றும் பணியாளர்களை அடக்கி வைத்திருப்பார்கள்; அதட்டுவார்கள்; வெருட்டுவார்கள். இத்தகைய அதட்டல்களுக்கும் வெருட்டல்களுக்கும் ஊழல் மோசடிகளை மறைப்பதற்கான அறிகுறிகள் என்பது உணரப்பட வேண்டும்.

அரச அதிகாரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்.

தமது வீட்டு வேலையை பணியாளர்கள் செய்வதாக அவர்கள் எண்ணக் கூடாது. சாதாரண மனிதர்களின் அடிப்படை மனித உரிமைகள் காப்பாற் றப்படுவது மிகவும் முக்கியமானது.

கோபம், உணர்ச்சிவசப்படல், பண்பாகக் கதைக்கத் தெரியாமை இவை அனைத்தும் மனநோய் வாய்பட்டதென்பது உளவியலாளர்களின் கருத்து.

இத்தகைய மனநோய் ஊழல் செய்வதனாலும் அதனை மறைக்க நினைப்பதனாலும் ஏற்படுவதாக மனநோய் நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

எனவே மேற்கூறப்பட்ட நோய்கள் இருப்பவர்கள் மனநோய் வைத்திய நிபுணர்களுடன் கலந்தாலோசித்து பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். இல்லையேல் பதவிகளிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும். இதனை வலியுறுத்துவது பணியாளர்களின் கடமையாகும்.

இதனைவிடுத்து நன்றாக கத்திக்குளறு என்று கதவைப் பூட்டி விடுவது மனநோய் முற்றுவதற்கும் மனித நேயம் அழிவதற்குமே உதவும்.

எனவே உயரதிகாரிகள் செய்யும் ஊழலை அம்பலப்படுத்தத் தமிழ் மக்களுக்கு உதவ வலம்புரி என்றோ தயாராகிவிட்டது. அதற்குப் பூட்டப்பட்ட கதவுக்குள் இருப்பவர்களே இருந்த வர்களே உதவுங்கள்.

# திருகோணமலையிலுள்ள மக்கள் புலிகளின் பகுதிக்கு இடம்பெயர்வு

(கிளிநொச்சி)

இராணுவத்தின் வலிந்த தாக்குதல் நடவடிக்கையால் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதியை நோக்கி திருகோணமலை மாவட்டத்திலிருந்து தமிழ் குடும்பங்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.மகேசன் பின்வருமாறு தெரிவித்துள்ளார். இதுவரை 16 ஆயிரத்து 540 குடும்பங்களைச் சேர்ந்த 62 ஆயிரத்து 643 பேர் அகதிகளாகியுள்ளனர்.

இவர்களில் 10 ஆயிரத்து 657 குடும்பத்தினர் மட்டக்களப்பு மாவட்டம் வாகரையில் ஐந்து முகாம்களில் தங்கியுள்ளனர். இதனிடையே செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமையில் மட்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வாகரைக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

வாகரைக்கு 13 லொறிகளில் வெள்ளிக்கிழமை நிவாரணப் பொருட்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதி கிராமங்களுக்கான நுழைவுப் பாதைகள் சனிக்கிழமை முதல் திறக்கப்பட்டுள்ளன.

பட்டிருப்புப் பாலத்தினூடான பாதை சனிக்கிழமை பிற்பகலில்தான் திறக்க சிறப்பு அதிரடிப்படையினர் அனுமதித்தனர் என அவர் தெரிவித்தார். (ச-5)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகள் முடக்கம்!

## மத்திய வங்கி உத்தரவு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனைத்து வங்கிக் கணக்குகளையும் முடக்க அரசாங்கம் உத்தரவிட்டுள்ளாது. கிளிநொச்சி மற்றும் கொழும்பிலுள்ள வங்கிகளுக்கு புனர்வாழ்வுப் பணியாளர்கள் சென்ற போதுதான் வங்கிக் கணக்கு மூடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

மத்தியவங்கியின் உத்தரவின் பேரில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாக இயக்குநர் லோறன்ஸ் திலகர் இதனை உறுதி செய்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி முடக்கப்பட்டுள்ளதாகவும் வங்கிகளிலிருந்து மறு அறிவித்தல் வரும்வரை பணத்தைப் பெற முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் லோறன்ஸ் திலகர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு 1985 ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வங்கிக் கணக்குகள் முடக்கம் குறித்து எதுவித முன் தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றும் லோறன்ஸ் திலகர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இத்தகைய நடவடிக்கையால் தற்போது இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான பணிகளும் ஆழிப் பேரலை மீள் அமைப்புப் பணிகளும் பாதிக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்கு 20 மில்லியன் தொகை இருந்துள்ளது. வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதையடுத்து கொழும்பிலுள்ள தனியார் வங்கிகளுக்குச் சென்று அரசாங்கத்தின் உத்தரவு குறித்தும் தங்கள் காசோலைகளை நிறுத்தி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட 28 நாடுகளில் புனர்வாழ்வுக் கழகம் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பாடசாலை மாணவர்கள் வியாபார நடவடிக்கையில் ஈடுபாடு

## தற்கால சூழ்நிலையே காரணம் என்கிறார் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள யுத்த சூழலையடுத்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டினால் பாடசாலைகளில் இயங்குகின்ற சிற்றுண்டிச்சாலைகள் இயங்காத நிலையில் ஆசிரியர்களும் மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நீண்ட தூரத்திலிருந்து வருகைதரும் ஆசிரியர்களும் ஏனைய உத்தியோகஸ்தர்களும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அச்சத்தினால் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதில் பெற்றோர்களும் பின்னிற்கின்றனர். தற் கால சூழ்நிலையைப் பயன்படுத்தி சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வியாபார நடவடிக்கையில் ஈடுபடுத்துகின்றனர்.

நீண்ட வரிசையில் நின்று எரிபொருள் பெற்றுக் கொள்ளும் சிறுவர்கள்அவற்றை விற்பனை செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றனர். சிறுவர்க்ளை தொழிலில் ஈடுபடுத்துவதை சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள் தடுக்க வேண்டும் எனவும் தெரிவித்த அவர்;

தென்மராட்சியில் வேறுபட்ட நேரத்தில் ஊரடங்கு நீக்கப்படுவதனால் பல மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் ஏனைய உத்தியோகஸ்தர்களும் பாடசாலைகளுக்கு சமுகம் தரவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இரண்டாம் தவணைக்கான பரீட்சைகள் தரம் 5 புலமைப்பரீட்சை என்பன இயல்பு நிலை திரும்பும் வரை நடத்த தீர்மானிக்க முடியாது எனவும் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்திலிருந்து மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகளுக்கும் ஆங்கில தினப் போட்டிக்காக கொழும்பு சென்ற மாணவர்கள் ஏ-9 வீதி மூடப்பட்டதனால் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரமுடியாமல் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (ச-5)

# கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அன்று இரவே விடுதலையாகினர்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் நேற்று முன்தினம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் நால்வர் அன்றிரவே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அன்றிரவு அவர்களின் வீடுகளுக்கு இராணுவத்தினர் கொண்டு சென்றுவிட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சின்னையா சிறிபரன் என்பவர் இரவு 11 மணிக்கும் நல்லையா ஜெகதீஸ் என்பவர் இரவு 8 மணிக்கும் சிவசுப்பிரமணியம் சிவகுமாரன், கனேந்திரன் கஜேந்திரன் ஆகிய இருவரும் இரவு 7.30 மணிக்கும் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மழையின் காரணமாக கப்பல் பயணம் தாமதம்

3ஆயிரத்து 810 மெற்றிக்தொன் உணவு மற்றும் மருந்துப் பொருளுடன் நேற்று யாழ்.நோக்கிப் புறப்பட விருந்த மாஸ் றுகுணு கப்பல் மழைகாரணமாக முழுமையாகப் பொருட்கள் ஏற்றப்படாத நிலையில் தாமதமாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அமீர் அலி தெரிவித்தார்.

இக் கப்பலில் யாழ்.குடாநாட்டிற்குத் தேவையான மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் என்பன அனுப்பி வைப்பதாகத் தெரிவித்த அவர் காலநிலை சீரானதும் இன்று கப்பல் யாழ்.நோக்கிப் புறப்படும் எனவும் தெரிவித்தார். (ச-5)

# வெள்ளைவான் கும்பலால் இளைஞன் கடத்தப்பட்டார்

## கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளை வானில் வந்த ஆயுதம் தாங்கிய 7 பேர் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் சம்பவம் நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு வீ.சி.லேன் கோப்பாய் தெற்கில் இடம்பெற்றுள்ளது.


கடத்தப்பட்ட இளைஞன் செல்வராசா ஐங்கரன் (வயது-24) எனத் தெரிவிக்கப்பட்டது. அவருடைய வீட்டிற்கு வெள்ளை வானில் சென்ற 7 ஆயுததாரிகள் வீட்டிற்குள் புகுந்து அவ் இளைஞனைக் கட்டி இழுத்துச் சென்றுள்ளனர்.

பெற்றோர் தடுக்க முற்பட்ட போது மேல் வெடி வைத்துவிட்டு வெள்ளை வானில் ஏற்றிச் சென்றுள்ளனர். பிரஸ்தாப இளைஞன் இருபாலைச் சந்தியில் நகைக்கடை ஒன்று நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன்

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று சந்திப்பு



**(சென்னை)**

**வடக்கு -கிழக்கு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு இந்தியா சென்றுள்ள தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேச்சு நடத்துவர் என எதிர் பார்க்கப்படுகிறது.**



வடக்கு கிழக்கு நிலைமை மற்றும் தமிழ் மக்கள் மீதான நெருக்குவாரங்கள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு ஒன்று இந்தியா சென்றுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா ,எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கொண்ட குழுவினர் டில்லித் தலைவர்களைச் சந்திப்பதற்காக தமிழகம் சென்றுள்ளனர்.

டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் உயர் மட்டத் தலைவர்களை இந்தக் குழுவினர் சந்திக்கவிருக்கின்றனர். இச் சந்திப்பு இன்று மாலை இடம்பெறக்கூடும் என தெரிய வருகிறது.

ஈழத்தமிழர்களின் அவல நிலை தொடர்பாக பிரதமருக்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளக்கமளிக்க தமிழகத் தலைவர்கள் ஏற்பாடு செய்துவருகின்றனர் என்றும் இன்று மாலை இச் சந்திப்பு இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

இதேவேளை ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசவேண்டும் என மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோபாலசாமி கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## 53 பேர் கொண்ட குழுவுடன் ஜனாதிபதி நியூயோர்க் பயணம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்துக்காக நியூயோர்க் செல்லும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் 53 பேர் கொண்ட குழுவினர் செல்கின்றனர்.

சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்காலத்தில் ஐ.நா.சபைக்கூட்டத்திற்கு 27 பேரும் ரணில் காலத்தில் 24 பேரும் சென்றிருந்த நிலைமையில் 53 பேரை மகிந்த அழைத்துச்செல்வது குறித்து ஜே.வி.பியினர் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

வீண் செலவுகளை குறைப்போம் என்று மகிந்த சிந்தனையில் கூறிய ஜனாதிபதி இப்போது பாரிய செலவில் இத்தனை பெரிய குழுவினரை அழைத்துச்செல்வதா என்று ஜே.வி.பியினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நியூயோர்க் செல்வதற்காக 53 பேரும் ஏற்கனவே விசாவிற்கு விண்ணப்பித்துள்ளனர். முன்னர் இந்தியாவுக்குச் சென்ற போது நூறு பேர் கொண்ட குழுவை மகிந்த ராஜபக்ஷ அழைத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

கியூபாவில் நடைபெறவுள்ள மாநாடு ஒன்றில் மகிந்தவின் தலைமையில் 35 பேர் கொண்ட குழு கலந்து கொள்கிறது. (ச-5)

## யாழில் மூன்று கிளைமோர் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மூன்று கிளைமோர் மீட்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.யாழில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் மூன்று கிளை மோர் கண்ணிவெடிகள் ,ஒரு ரொக்கெட் புரோபெல்ட் கைக்குண்டு,81 எம்.எம். மோட் டார்க்குண்டு மற்றும் 4.60 எம்.எம். மோட்டார் குண்டுகைப்பற்றியதாகதெரிவிக் கப்பட்டுள்ளது.

இதனிடையே மிருசுவில் பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதில் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்து பலாலி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (ச-5)







நாட்டில் யுத்தம் வேண்டாம், சமாதானம் வேண்டும் என வலியுறுத்தி மட்டக்களப்பில் நேற்று அமைதிப் பிரார்த்தனையும் ஊர்வலமும் இடம்பெற்றுள்ளது. அல்லைப்பிட்டி பங்குத்தந்தை ஜிம்புறவுன் மற்றும் அவரது உதவியாளரும் பாதுகாப்பாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

தாண்டவன்வெளி வியாகுலமாதா ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையின் பின்னர் அங்கிருந்து காலை 8 மணியளவில் கத்தோலிக்க மதகுருக்கள், கன்னியாஸ்திரிகள் உட்பட ஆயிரம் பேர் ஊர்வலமாக புறப்பட்டுச் சென்றனர்.

## யாழிலும்...

நடத்தி வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை பருத்தித்துறை நகரை அண்டிய தும்பளை வீதியில் நேற்று 3 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சுடப்பட்டவர் பன்னக்கட்டை பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.மதன் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் தையலகம் ஒன்றை நடத்தி வந்ததாக தெரிவிக்கப்பட்டது. இவரது சடலம் மரணவிசாரணை மற்றும் பிரேதபரிசோதனை என்பவற்றிற்காக மந்திகை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-5,52,101)

## நாகர்கோயில்...

சத்தங்கள் கேட்டதாக தென்மராட்சி மக்கள் தெரிவித்தனர். நேற்றிரவு பரவலாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிர தேசங்கள் மீது இராணுவத்தினர் வலிகாமம் ,வடமராட்சி பகுதிகளிலிருந்து ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொண்டனர். (ச-5)

## இந்தியாவின்...

இந்தியாவின் ஆதரவைப் பெறும் வகையில் இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நோர்வே அரச வானொலியில் நோர்வேயின் சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரை மேற்கொள் காட்டி கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப் பிடத்தக்கது. (ச-5)

## வன்முறை...

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 20 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் அவர்களில் இராணுவத்தினரும் பொது மக்களும் அடங்குவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச)

## க.கா.குழுவின்...

கிளிநொச்சியில் உள்ள அலுவலகம் தொடர்ந்து இயங்கும்.

எமது நடவடிக்கைகளில் தற்போது எதுவித மாற்றமும் இல்லை. கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் எமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து முடிவெடுப்பார்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறைக்கான அலுவலகங்கள் அம்பாறையிலும் மன்னார் மற்றும் வவுனியாவுக்கான அலுவலகங்கள் வவுனியாவிலும் இயங்கவுள்ளது.

திருகோணமலையில் இருந்து கண்காணிப்புக்குழுவினர் வெளியேறிய நிலையில் ஹபரணையில் இருந்து இயங்கிவருகின்றனர் என்றார் ஓமர்சன். (ச)

## யாழ்-கொழும்பு...

காரணமாக யாழ்-கொழும்பு பயணிகள் விமானசேவை இடைநிறுத்தப் பட்டிருந்தது.

இந் நிலையில் விமான சேவையை நடத்துவதற்கான அனுமதி படையினரால் வழங்கப்பட்டது.இதேவேளை தற்போது யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளமையால் விமானப்போக்குவரத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்.-கொழும்பு பயணிகள் விமான சேவையில் எக்ஸ்போ ஏயர் மற்றும் ஏரோலங்கா நிறுவனங்கள் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சம்பூரை கைப்பற்றிய...

விடுதலைப்புலிகளிற்கு எதிரான விமானத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் விமானிகளை இலங்கை அரசு பயன்படுத்துகிறது என வெளியான தகவல் குறித்து விளக்கமளிக்க இந்தியா சென்ற பசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் சம்பூர் பிரதேசம் உள்ளது. இது திருகோணமலை கடற்தளத்திற்கு ஆபத்தாக உள்ளது.

இந் நிலையில் சம்பூர் பகுதியை முழுமையாக கைப்பற்றினால் மாத்திரமே திருகோணமலை கடற்படைத் தளத்தை பாதுகாக்க முடியும். எனவே சம்பூர் பகுதியை மீட்கும் வரை தாக்குதல்கள் நிறுத்தப்படமாட்டாது என அவர் இந்தியத் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

சம்பூர் பகுதி இராணுவ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதும் தாக்குதல்கள் நிறுத்தப்படும். விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.? இரண்டாம் [illegible] அவர்களது அச்சகத்தில் 04.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org